## தர்மபுரி மாவட்டத்தில் பட்டுப்புழு அபிவிருத்தி நிலையம் அமைக்கும் திட்டம்.

209—(*வினா எண் 18410)—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டத்தில் 1982-83-ல் பட்டுப்புழு அபிவிருத்தி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) எந்த இடத்தில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) 1982-83ல் தர்மபுரி மாவட்டத்தில் வேலம்பட்டி தேவீரஹள்ளி, பிக்கம்பட்டி, மற்றும் அவலப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங்கள் Villag l vel Community Chawkie Rearing Centr s ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் ஓர் ஆண்டுக் காலத்திற்கு முன்பு போட்டேன். ஆனால் இன்று வரையில் தருமபுரி மாவட்டத்தில் பட்டுத் துறை மூலமாக என்னென்ன முன்னேற்றத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன என்பதை அறிவிக்க இயலுமா ? அதோடு தருமபுரி மாவட்டத்தில் விதைக்கூடு பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் உள்ளதா? அது எவ்வளவு தொகையில் எங்கே ஆரம்பிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 25 கிராமிய இளம்புழு மையங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியது. 1982-83ஆம் ஆண்டு மேலும் 40 மையங்களைத் தமிழ் நாட்டில் அமைக்க அரசு அனுமதி வழங்கியது. 1983—84ஆம் ஆண்டில் பகுதி 2ஆவது திட்டத்தின்கீழ் மேலும் 50 கிராமிய இளம்புழு மையங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியது. 1984ஆம் ஆண்டு சனவரி முடிய 30 மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி என்ற இடத்தில் பயோடின் கூட்டுப்புழு அமைக்கும் திட்டத்திற்காக ரூ. 14.28 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, நிலம் எடுக்கப்பட்டு விட்டது. விரைவில் கட்டிடப் பணிகள் தொடங்கப்படும்.